வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3901/ஆ4/2023, நாள். 20.09.2023

| | |
|---|---|
| பொருள் | ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி 2023–2024 கல்வியாண்டு –11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள் மாணவர்களுக்கு விநியோகித்தல் –பள்ளிகளுக்கு நெறிமுறைகள் வழங்குதல் –சார்பு |
| பார்வை | 1. தமிழ்நாடு,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத்திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.2349/ஆ2/ நா.மு.6/ஒபக/2023 நாள் 11.09.2023 |

.....

பார்வையில் காணும் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி வேலூர் மாவட்டத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளிகளில் (Fully Aided ) 2023 –2024 கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி அனைத்து மாணவர்களுக்கும் விநியோகித்திட அனைத்து அரசு மற்றும் நிதியுதவி(Fully Aided) மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் :**

- 2023 –2024 ஆம் கல்வியாண்டில் பயிலும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கையேடுகள் வழங்கப்பட வேண்டும். இக்கையேடுகள் இரண்டு ஆண்டுகளுக்கானது.இந்த ஆண்டு இக்கையேட்டினை பெறும் 11 ஆம் வகுப்பு மாணவர்கள் இதே கையேட்டினை தங்களின் 12 ஆம் வகுப்பு வரை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற தகவலை மாணவர்களுக்கு எடுத்துரைத்து ஒரு மாணவருக்கு ஒரு கையேடு என்ற அடிப்படையில் அனைத்து மாணவர்களுக்கும் விநியோகிக்க வேண்டும்.

மேலும் அரசு மற்றும் நிதியுதவி(Fully Aided) மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் பொறுப்பான ஆசிரியரை நியமித்து முகப்பு கடிதத்துடன் காட்பாடி அரசு ( ஆண்கள்) மேல்நிலைப் பள்ளியில் (25.09.2023)அன்று நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – படிவம்

//ஒம்.செ.மணிமொழி//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்.
அரசு மற்றும் நிதியுதவி(Fully Aided) மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்.
1.கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,வேலூர். அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது,

2.வேலூர் மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) அவர்களுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

3.ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட அலுவலர்,அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

| படிவம் | |
|---|---|
| உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள்2 023-2024-ம் கல்வியாண்டில் பயின்று வரும் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப பெறப்பட்ட விவரம் | |
| மாவட்டம் | வேலூர் மாவட்டம் |
| பள்ளி எண் மற்றும் பள்ளியின் பெயர் | 246 – |
| பள்ளி UDISE எண் | |
| பள்ளி தலைமை ஆசிரியரின் பெயர் | |
| பள்ளி தலைமை ஆசிரியரின் கைப்பேசி எண் | |

| வஎண். | 2023 –2024 கல்வியாண்டில் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை | உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள் பெறப்பட்ட எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|
| | | | |

## சான்று

மேற்குறிப்பிட்டுள்ள மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள் பெறப்பட்டது என சான்று வழங்கப்படுகிறது .

தலைமை ஆசிரியர் கையொப்பம்

குறிப்பு: பள்ளித் தலைமையாசிரியர்கள் படிவத்தினை பூர்த்தி செய்து
இருநகல் காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஒப்படைத்து
பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.